# சிலம்பம், குங்பூவில் பரிசுகளை அள்ளும் மாணவர்



**போடி**

போடி அருகே தர்மத்துப்பட்டியை சேர்ந்தவர்எஸ்.ஸ்ரீஹரி. தேனி வேலம்மாள் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 9 ம் வகுப்பு படித்து வருகிறார். வீட்டில் சுட்டியாகவும், படிப்பில் சிறந்து விளங்கும் இவர் சிலம்பம், குங்பூ உள்ளிட்ட போட்டிகளிலும் வெற்றி பெற்று பரிசுகளை குவிக்கிறார்.

ஸ்ரீஹரி கூறியதாவது:

சிறுவயதில் இருந்தே விளையாட்டில் ஆர்வம் இருந்ததால் ஏதாவது வகையில் சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. அதைப் பார்த்த முன்னாள் ராணுவ வீரரான அப்பா செந்தில்குமார், அம்மா ரேணுகா எனக்கு ஊக்கம் அளித்தனர்.

குருவாக பயிற்சி அளித்து வரும் மாஸ்டர்கள் நீலமேகம், சொக்கர் மீனா, பாக்சிங் மாஸ்டர் வாஞ்சிநாதன் தொடர் வெற்றி பெற வழிகாட்டுகின்றனர். போட்டியில் கலந்து கொள்ள பள்ளி நிர்வாகத்தினர் உற்சாகப் படுத்துகின்றனர்.

குங்பூவில் தென்னிந்திய அளவில் நடந்த போட்டியில் ஆறு முறை முதலிடம் பிடித்து தங்கப்பதக்கம் பெற்றுள்ளேன். கடந்த ஆறு மாதங்களுக்கு முன் திருச்செங்கோட்டில் நடந்த போட்டியில் முதலிடம் பிடித்து தங்கப்பதக்கம் பெற்றுள்ளேன். மாநில அளவில் பள்ளிகளுக்கு இடையே நடந்த யோகா போட்டியில் முதலிடம் பெற்றுள்ளேன்.மாநில அளவில் நடந்த சிலம்பம் போட்டியில் ஐந்து முறை முதலிடம் பெற்று தங்கப்பதக்கம் பெற்றுள்ளேன்.

கடந்த வாரம் அரவக்குறிச்சியில் மாநில சிலம்பாட்ட போட்டியில் முதலிடம் பிடித்து தங்கம் வென்றுள்ளேன். தேசிய அளவிலான சிலம்பாட்ட போட்டிக்கு தேர்வு பெற்றுள்ளேன்.முறையான பயிற்சி பெறுவதன் மூலம் உடலுக்கு புத்துணர்ச்சி, ஆரோக்யம், படிப்பதிலும் அதிக ஆர்வம் ஏற்படுகிறது. நன்கு பயிற்சி பெற்று தேசிய அளவில் நடக்கும் சிலம்பம் போட்டியில் முதலிடம் பெறுவதே லட்சியமாகும், என்றார்.

இவருக்கு சபாஷ் கூற 90920 60302.